இலங்கை நியமங்கள் நிறுவனம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் (“நிறுவனம்”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிதியத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 54(இ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய பெறுமதி ரூபா 7,514,608 ஆன கணனி மென்பொருள் முறைமை கற்பனைச் சொத்தாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டி ருந்தது.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 88 ஆம் பந்தியின் பிரகாரம் காலப் பகுதிக்கான சகல வருமானம் மற்றும் செலவினங்கள் அந்த ஆண்டின் நிதி விளைவுகளில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் தொலைபேசி, போக்குவரத்து மற்றும் ஏனைய செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 7,406,651 ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக இலாபம் அதிகரித்தும் மற்றும் பொறுப்புக் கள் அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப் பட்டிருந்தது. பயிற்சி பாடநெறி வருமானம் ரூபா 729,781 ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சகல வருமானங்கள் செலவினங்கள் நிதி விளைவுகளில் உள்ளடக்குதல் வேண்டும்.
(இ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி என்ற பெறுமதியில் குறைந்த பெறுமதியில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதி பெறப்பட்டதன் பின்னர் கிரயமான ரூபா 16,739,068 இருப்பின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது.	இருப்பின் பெறுமதி மற்றம் தேறிய தேறக் கூடிய பெறுமதி என்ற பெறுமதிகளை கணவத்திற் கொண்டு குறைந்த பெறுமதியில் காண்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இருப்பு பெறுமதி இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 50 மற்றும் 51 ஆம் பந்திகளின் பிரகாரம் பயன் பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்து பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 709,173,336 ஆன சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	இழிவுப் பெறுமதி பூச்சியமான சொத்துக்கள் எதிர்காலத்தில் மீள் மதிப்பீடு செய்து கணக்கு கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படல் வேண்டும்.
(உ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 77 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 40,677,054 ஆன மீள் மதிப்பீட்டு இலாபம் நிதி நிலைமைக் கூற்றிலும், நிதிய மாற்றங்கள் கூற்றிலும் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப்பட வில்லை.	மீள் மதிப்பீட்டு இலாபம் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஊ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்தப்படுகின்ற ஊதியம் மற்றும் ஏனைய படிகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தின் பிரதான முகாமைத்துவ பதவியணியில் அந்தப் பதவி அல்லது தொடர் புடைய தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல் மேற் கொள்ளாதிருந்தமைக்கு நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்வில்லை.	பதிலளிக்கப்பட வில்லை.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 இன் 58 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப் பகுதியின் போதும் நிதிச் சொத்துக்களின் இழப்பொன்று ஏற்பட்டிருந்ததா என்பது தொடர்பாக மதிப்பீட்டு அவ்வாறு குறைவடைந்திருக்குமாயின் இழப்பீடுகள் கழிக்கப்பட்ட பெறுமதி அந்த சொத்துக்களில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய் வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 17,349,400 ஆன 208 கடன்பட்டோர் மீதிகளுக்காக பரிசோதனைகள் மேற்கொண்டு இழிவுப் பெறுமதியைக் காண்பிப்பதற்கு பதிலாக ரூபா 173,494 அறவிட முடியாக் கடன் ஒதுக்கப்பட்டிருந்தது.	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 இன் பிரகாரம் சகல கடன்பட்டோரினதும் பகுப்பாய்வை மேற்கொண்டு கணக்காய்வுக் குழு மற்றும் பொதுச் சபை அங்கீகாரத்தைப் பெற்று இந்த கடன்பட்டோரை புத்தகங்களலில் இருந்து அகற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் இழப்பீட்டை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
(அ)	ஆய்வுட்கால இலாபம் மற்றும் நட்டம் சீராக்கப் பட்டு நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களில் சீராக் வேண்டியிருந்த போதிலும் ரூபா 19,526,749 ஆன ஆயுட்கால இலாபம் நிதியங்கள் மாற்றக் கூற்றில் ஏனைய ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்பட வில்லை.	ஆயுட்கால இலாபம் மற்றும் நட்டம் சீராக்கி நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களில் சீராக்குதல் வேண்டும்.
(ஆ)	ரூபா 8,687,329 ஆன ஆய்வுகூட உபகரணங்களுக்கு உரிய ரூபா 868,732 ஆன ஆண்டின் பெறுமானத் தேய்வு செலவினம் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக சமமான பெறுமதியால் ஆண்டின் இலாபம் மற்றும் சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்த பெறுனாத் தேய்வின் அளவு 2025 சனவரி 27 ஆந் திகதி சரி செய்யப்பட்டுள்ளது.	காலப் பகுதிக்குரிய பெறுமானத் தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(இ)	2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்களில் சேவையிலிருந்து அகற்றப்பட்ட 04 ஊழியர் களுக்காக குறித்துரைத்த திகதியில் பணிக் கொடைப் பணம் செலுத்தாமையின் காரணமாக செலுத்தவேண்டியிருந்த ரூபா 319,953 மிகைக் கட்டணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் பணிக்கொடைகள் குறித்துரைத்த பிரகாரம் சேவையிலிருந்து விலகியவர்களுக்காக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இனங்காணப்படுகின்ற பொறுப்புக் களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஈ)	காசுப்பாய்ச்சல் கூற்றில் இலாபத்திலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 27,602,746 ஆண்டின் வட்டி வருமானம் குறைத்துக் காண்பிக்கப்படாதிருந்ததுடன் பணமாகக் கிடைத்த வட்டி வருமானமான ரூபா 150,106,994 முதலீட்டு செயற்பாடுகளி லிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப் பாய்ச்சலாக கணனி மென்பொருளில் 02 வகைகளுக்காக 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 11,657,928 மற்றும் 2014, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மாலபே காணி கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 168,000,000 முற்பணம் பிழையாக காண்பிக் கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்படல் வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2015 - 2021 ஆம் ஆண்டுகளுக்கிடை யிலான காலப்பகுதிக்குரிய ரூபா 3,220,386 ஆன ஒப்பந்த நிறுத்திவைத்தல்களில் 22 வைப்புக்களை தீர்த்துவைக்காமல் தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் பொதுச் சபை அங்கீகாரத்தைப் பெற்று வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மீண்டும் கோரப்படாதிருந்ததை உறுதிப்படுத்தி வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) ரூபா 49,747,362 தீர்த்துவைக்கப்படாமல் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில்	இந்த NBT பணத்தின் அளவு தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து விசாரணை செய்யப்பட்ட போதிலும் எழுத்து மூலம்	செலுத்த வேண்டிய வரித் தொகையை செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடடிவடிக்கை

	காண்பிக் கப்பட்டிருந்தது.	எந்தவொரு பதிலும் கிடைக் காதிருந்ததமையால் எதிர்காலத்தில் பொதுச் சபை அங்கீகாரத்தின் அடிப்படை யில் இந்த தொகையை கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடன ான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவன சட்டம்			
(i)	2(இ) பிரிவு	SLS இலட்சினையைப் பயன்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது தொடர்ச்சியாக உரிய உற்பத்தி செய்த இலங்கை நியமங்களுக்குவதை உறுதிப் படுத்துவதற்காக தர முறைமை திருப்திகரமாக அமுல்படுத்துதல் மற்றும் அனுமதிப்பத்திர நிபந்தனை களுக்கு இணங்குவதை மெய்மை ஆய்வு செய்வதற்காக திறந்த சந்தையில் உற்பத்தியில் தெரிவினைப் பெற்று பரிசோதனைகள் மேற்கொள் ளப்படல் வேண்டும். அதன் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு நியம சான்றுதல் இலட்சினை (SLS) பெற்றிருந்த பொருட்களின் எண்ணிக்கை 924 ஆக இருந்த போதும் 2024 ஆம் ஆண்டின் போது சந்தையில் 183 பொருட்களுககாக அதாவது 20 சதவீத்திற்காக மட்டுமே ஆய்வு செய்யப்பட்டிருந்தது.	2024 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சந்தை தெரிவுகள் 183 மற்றும் சந்தைக்கு விநியோகிப்பதற்கு முன் ஏற்றுமதி பரிசோதனைகளுக் கான தெரிவுகள் 133 பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் SLS பின்தொடர் ஆய்வு நடவடிக்கை களுக்காக தெரிவுகள் 316 பெறப்பட்டு பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவையான மாதிரிகளின் செயற்பாடுகளை முறைமைப்படுத்துவ தற்காக நுகர்வோர் அலுவல்கள்	நியமன நிறுவன சட்டத்தின் பிரகாரம் உற்பத்திகள் நியமத்திற்கு இணங்கியிருந்த மைக்கு பின்தொடர் பரிசோதனை கள் மேற்கொள்ளபட பல் வேண்டும்.

			அதிகார சபையிடம் உடன்படிக்கை செய்வதற்க தேவை யான புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரித்து நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.	
(ii)	3(ஏ) பிரிவு	நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கமாக வியாபாரப் பொருட்கள், மூலப் பொருட்கள் உற்பத்தி, உற்பத்தி செய்யப்பட்ட, உற்பத்தி மற்றும் ஏனைய வைகளின் தரத்தை உறுதிப்படுத்துதல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் நியமங்கள் சான்றிதழ் கட்டாயமாக உள்ள பொருட்களாக இருந்த போதிலும் தரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், மற்றும் ஒழுங்கமைப்பதற்கும், நியம மாதிரிகளுக்கு இணங்காதிருந்த உற்பத்திகள் நுகர்வோர் கையில் சென்றடைவதற்கான இயலுமையை குறைப்பதற்கும் தேவையான கட்டுப்பாட்டு திட்ட முறைமை யொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	SLS இலட்சினை சான்றிதழ் முறையின் கீழ் உற்பத்திக்கு இணங்க மற்றும் உற்பத்தி செயற்பா டுகளுக்கு இணங்க தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுகின்றதா அவ்வறே அதற்காக தொழிற்சாலைகளில் தொடர்ச்சியாக பின் தொடர் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகி ன்றது. அந்த கணக்காய்வுகளின் போது SLS சான்றிதழ் உடைய பொருட்களின் சரியான தரத்திற்கு இணங்க உற்பத்தி செய்யும் இயலுமை, நிறுவனத்தின் தர முகாமைத்துவ முறைமை கணக்காய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படு கின்றது. அதன் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டில் உற்பத்தி செயற்பாடுகளிலி ருந்து பெறப்பட்ட	சட்டத்தின் பிரகாரம் தரச் சான்றிதழ் தரத்தை உறுதிப்படுத் துவதற்கு, அந்த தரத்தை பேணிச் செல்வதற்கும் தேவையான கட்டுப்பாட்டு முறைமை யொன்றை அமுல்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			தெரிவுகளின் எண்ணிக்கை 1963 ஆகும். மேலும் உற்பத்தியின் தரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக எழுமாறாக சந்தைகளில் தெரிவுகளைப் பெற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	
(ஆ)	1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைப் படி சட்டம்	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சேவையிலிருந்து விலகிச் சென்ற 04 ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 760,830 பணிக்கொடைகள் கணக்காய்வுத் திகதியான 2025 மே 31 வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	பணிக்கொடை செலுத்தாமைக்கான அடிப்படையாக அவர்களின் நிறுவனத்திற்கு உரியதாக அறவிட வேண்டியிருந்தமைகள் கிடைக்காமை தாக்கமளித்திருந்தது. அதன் பிரகாரம் எதிர்காலத்தின் போது எவ்வாறாயினும் அறவிடப்பட்டு பணிக் கொடை செலுத்தப் பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
(i)	நிதிப் பிரமாணம் 395(உ)	ஒரு நடைமுறைக் கணக்கிற்குரிய 2024 திசம்பர் மாதத்தில் வங்கி இணக்கக் கூற்றில் காணப்பட்ட இனங் காணப்படாத வைப்புக்கள் ரூபா 34,708,751 இனங் கண்டு கணக்கீடு செய்வதற்கு நடடிவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த இனங்காணப்பாத வைப்புக்களில் ஏதே ஒரு அளவு 2025 இல் முன்வரும் மாதங்களின் போது இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	இனங்காணப் படாத வைப்புக்களை இனங்கண்டு சரிசெய்து கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய	2024 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள்	2024 ஆம் ஆண்டிற்குரிய பொருள்	பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள்

	இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) பிரிவு	மேற்கொண்டு அறிக்கை கணக் காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டின் மே 29, 30 என்ற இரண்டு தினங்களிலும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.	உரிய ஆண்டின் யூன் 15 ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிகையின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூல்			
(i)	4.2 ஆம் பந்தி	2024 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் இரண்டு மாத்திரம் நடாத்தப் பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 02 நடாத்தப்பட்டுள்ளது.	ஒரு ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்படல் வேண்டும்.
(ii)	6.6 ஆம் பந்தி	2023 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கை அமைச்சிற்கு அனுப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	2024 திசம்பர் 23 ஆந் திகதிய இலக்கம் PED/03/2024 என்ற பொது	2023 இன் நிதி ஆண்டில் இலாபம் உழைக்கப்பட்டிருந்த போதும் இலாபத்தில் ஆகக் குறைந்தது 30 சதவீதம் திரண்ட நிதியத்திற்கு இலாபப் பங்கு	இந்த 30 சதவீதம் திரண்ட நிதியத்திற்குச் செலுத்துதல் Installment 04 இல் செலுத்துவதற்கு	சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த ஆண்டில் இலாபத்தில் குறித்துரைத்த அனுப்புதல்கள்

முயற்சிகள் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி	/ வருமான வரியாக செலுத்தப்படாதிருந்த நிறுவனங்கள் இலாபத் தன்மையின் அடிப்படையாகக் கொண்டு பதவியணியினருக்கு மிகையூதியம் செலுத்து வதற்காக உரித்து பெறுவதில்லை. எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் நிறுவனத்தால் 2023 இல் மிகையூதியப் படியாக ஊழியர்களுக்கு ரூபா 7,995,025 செலுத்தப்பட்டிருந்தது.	பொதுச் சபை அனுமதியளித்து மிகையூதியப் படி செலுத்தப்பட்டுள்ளதுடன் அந்த முறையில் பொது திறைசேரிக்கு எதிர்காலத்தில் செலுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	திறைசேரிக்கு மேற்கொண்டு ஊக்குவிப்பு படிக்கான உரித்து பெறுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 488,058,950 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 445,059,698 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 42,999,252 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமானம் ரூபா 154,464,151 இனால் அதிகரித்தமையும், மொத்த செயற்பாட்டுச் செலவினம் ரூபா 40,206,320 இனால் குறைவடைந்தமையும் மற்றும் பொதுத் திறைசேரி பங்களிப்பு ரூபா 75,692,650 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிறுவனத்தால் 2020 ஆம் ஆண்டில் ரூபா 2,800,000 செலவில் இருப்புக் கட்டுப்பாட்டிற்காக கணனி முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப இருப்பு மீதி முறைமையில் உள்ளடக்காமையின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட கணனி முறைமையில் எதிர்பார்த்த பிரகாரம் சரியான இருப்புக் கட்டுப்பாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.	எதிர்காலத்தில் இந்த நிலைமையைக் தவிர்த்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்பு முறைமை தேவையான தரவுகளுடன் நாளது வரையாக்கி பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ஆ)	Local Area Network மற்றும் IP PBX System ஸ்தாபிப்பதற்காக இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு 02 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 57,596,886 இற்குரிய பெறுகை தொகைக்கு உரிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8(ஆ) பிரிவின் பிரகாரம் பெறப்பட்டிருந்த	குறித்துரைத்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமை தொடர்பாக பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் எழுத்து மூலம் எச்சரிக்கைக் கடிதம் விநியோகிக்கப்பட்டுள்ள	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயலாற்றல் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

செயலாற்றல் காப்புறுதி உத்தரவாதக் காலத்தை மேவுகை செய்யும் வகையில் காலத்தை நீடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	துடன் செயலாற்றல் காப்புறுதி நீடிக்கப்பட்டுள்ளது.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
03 டின் மீன் உற்பத்தி நிறுவனங்களால் 2023 சனவரி 02 முதல் செப்டெம்பர் 30 வரையான காலப் பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட டின் மீன் இருப்புக்கள் எதிர்பார்த்த நியமங்களுக்கு இணங்காமையின் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் போது ஒவ்வொரு டின் மீன் இருப்புக்களுக்கும் தெரிவினை பெற்றுக்கொள்ளல் மற்றும் உரிய நியமங்கள் இன்றி இருந்தமைக்கான கடிதம் விநியோகிப்பதற்காக 52 நாட்களுக்கும் 188 நாட்களுக்கும் இடையிலான காலம் எடுத்ததன் காரணமாக சரியான நியமத்திற்கு இணங்காத இருப்புக்கள் சந்தைக்கு விடுவிக்கப்படும் ஆபத்து காணப்பட்டது.	டின் மீன் இருப்பு மாதிரிகள் பரிசோதனையின் போது இணங்காதிருந்தமை அறிக்கையிடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது டின்மீன் வழகாட்டி மற்றும் நியமங்களின் பிரகாரம் குறைபாடுகளுக்காக ஆரம்ப வகைப் படுத்தல் (initial sorting) மற்றும் 100 சதவீத வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பின்னர் குறைபாடுகளுடன் உள்ள இருப்புக்கள் தொடர்பாக இறுதி தீர்மானம் எடுப்பதற்காக துறைசார்ந்த பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. அது 100 சதவீத sorting மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் அதற்காக எடுக்கின்ற காலம் இருப்பின் அளவின் பிரகாரம் வேறுபடுகின்றது. பெறுபேறு களைப் பெற்றுக்கொள்வதற்காக 14-15 நாட்கள் காலம் எடுக்கின்றது. அந்தப் பரிசோதனைகளின் போது இணங்கியிருந்த சந்தர்ப்பங்களின் போது இணங்கியதற்கான கடிதமும் மற்றும் இணங்காமைக்காக மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களின் போது நிராகரித்தல் கடிதமும் விநியோகிக்கப்படுகின்றது. அதற்காக கவனத்திற் கொள்ளக்கூடிய கால வீச்சினை எடுக்கின்றது.	நியமங்கள் தொடர்பாக பரிசோதனை மேற் கொள்ளல் விரைவாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் எதிர்பார்த்த நியமங் களுக்கு இணங்காத இருப்புக்கள் சந்தைக்கு விடுவிப்பதற்கு தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.